**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, KRISHNAGIRI**

**O.S. No.311/2022**

**PW.2** is solemnly affirmed on **03.07.2025** in accordance with the provisions of the 1873.

| Name | திரு. அபுதாகீர் | Father Name | |
|---|---|---|---|
| Village | | Taluk | |
| Religion | | Calling | |
| | | Age | |

**முதல் விசாரணை :**

நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதில் கூறப்பட்டுள்ள விவரங்கள் என்னால் கூறப்பட்டது தான், அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பில் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்துக்கொள்ளவில்லை.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் மகாராஜாகடை ரோட்டில் பழைய பேட்டையில் குடியிருக்கிறேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் கார் ஓட்டுகிறேன். கமலநாதன் என்பவர் தாக்கல் செய்துள்ள வழக்கு விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கமலநாதன் என்பவரின் மனைவி பெயர் கவிதா, கவிதா என்பவர் அவருடைய சகோதரியான சங்கீதாவிற்கு பணம் கொடுத்தார். கவிதா எங்கு வைத்து, எப்படி பணம் கொடுத்தார் என்றால் கவிதாவின் வீட்டில் வைத்து பணம் கொடுத்தார். கவிதா எங்கு பணிபுரிகிறார் என்றால் சுயஉதவி குழுவில் பணிபுரிகிறார். அவர் எவ்வளவு பணம் கொடுத்தார் என்றால் சுமார் ரூ.7,00,000/- கொடுத்தார், அந்த பணத்தை எப்படி கொடுத்தார் என்றால் ஐநூறு ரூபாய் நோட்டுக்களாக கொடுத்தார். அது எவ்வளவு கட்டுக்கள் என்றால் 14 கட்டுக்களாக கொடுத்தார். கவிதாவிற்கு அந்த பணம் எப்படி கிடைத்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் கார் ஓட்டியாக இருப்பதாக சொல்லியுள்ளேன், அப்போது நான் வீட்டில் இருந்தேனா என்றால் கமலநாதன் என்னுடைய நண்பர், அவரும், அவரது மகனும் என்னை அவர் வீட்டிற்கு வந்து

அழைத்து சென்றார்கள். கமலநாதன் என்னை வந்து அவர் வீட்டிற்கு அழைத்து சென்ற கிழமை என்ன என்றால் புதன் கிழமை என்று நினைக்கிறேன்.

எத்தனை மணிக்கு வந்து என்னை அழைத்து சென்றார்கள், நான் எத்தனை மணிக்கு போனேன் என்றால் காலை 10.30 மணிக்கு வந்து அழைத்து சென்றார்கள். பழையபேட்டைக்கும், அவர்கள் குடியிருக்கும் இடத்திற்கும் இடையே எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் 1/2 கி.மீ. இருக்கும். புரோநோட்டில் நான் எப்போது கையொப்பமிட்டேன் என்றால் சுமார் மதியம் 2.00 மணிக்கு கையொப்பமிட்டேன். நான் நமாஸ் செய்பவர், நமாஸ் எப்போது முடிப்பேன் என்றால் மதியம் 1.00 மணிக்கு முடிப்பேன். மதினா மஜீன் என்ற பள்ளி வாசலில் நான் நமாஸ் படிப்பேன். நான் கையெழுத்து போடும் போது அந்த ஆவணம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததா அல்லது வெற்றிடமாக இருந்ததா என்றால் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அந்த புரோநோட்டை யார் கைப்பட எழுதியது என்றால் கவிதாவின் நண்பர் எழுதினார், அவர் பெண், அவருடைய பெயர் ரமணி. ரமணி அப்போது அவர்கள் வீட்டில் இருந்தாரா என்றால் இருந்தார். என் முன்னிலையில் தான் அவர் எழுதினார்.

அந்த புரோநோட்டில் அவர் சங்கீதாவின் முன்னிலையில் தான் கையெழுத்திட்டார். என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புரோநோட்டில் உள்ள கையெழுத்தும், வக்காலத்தில் போடப்பட்டிருக்கும் கையெழுத்தும் மாறுபட்டு காணப்படுகிறதா என்றால் இல்லை, ஒரே மாதிரி தான் காணப்படுகிறது. நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு சம்மன் பெற்று தான் வந்துள்ளேனா என்றால் ஆமாம். கமலநாதனுடைய மகன் என்னுடைய நண்பர் என்ற காரணத்தினால் என் நண்பர் கேட்டுக்கொண்டதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சங்கீதாவின் புரோநோட்டில் போட்ட கையெழுத்தும், வக்காலத்தில் போட்டிருக்கும் கையெழுத்திற்கும் வித்தியாசம் இருந்தும், அதை இல்லை என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சங்கீதா என்ற ஒரு நபர் இங்கு இல்லவே இல்லை, அவர் பேரனாம்பேட்டில் இருக்கிறார் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளதாக இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R

Principal District Judge,
Krishnagiri.